# தந்தையின் அளவற்ற அன்பு

பாடம்
17

லூக்கா 15 : 11-32

மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா
மன்னிப்பு மன்னிப்புத் தாருமே இறைவா
மன்னிப்புத் தாருமே இறைவா

1. ஆண்டவர் ஆன்மாவை விரும்புகிறார்
மாண்டிட்ட ஆன்மாவை தேடுகின்றார்
அண்டிடும் பாவிக்கு அருளுகின்றார் - நேரில்
வேண்டிடும் துரோகிக்கு இரங்குகின்றார் - மன்னிப்பு.

2. ஏன் சொத்தை தந்திடும் என்று கேட்டான்
தன் சொத்தைப் பெற்றவன் பயணமானான்
தன் இஷ்டம் போலங்கே செலவு செய்தான் அவன்
தன் வாழ்வைப் பாவத்தில் மூழ்கடித்தான் - மன்னிப்பு.

3. பன்றிகள் மேய்த்தவன் தவிடு உண்டான்
தன் தந்தை அன்பினைக் கனவு கண்டான்
மன்னிப்புக் கேட்டங்யே ஓடிவந்தான் - தந்தை
மன்னித்து மகனாக அணைத்து ஏற்றார் - மன்னிப்பு.

4. குற்றங்கள் இல்லையே என்று சொன்னால்
தம்மைத் தாம் ஏமாற்றி நலிந்திடுவோம்
குற்றங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தர் - தேவன்
குற்றத்தை மன்னித்து வாழ்வளிப்பார் - மன்னிப்பு.



செயற்பாடு

1. பாடலை வகுப்பில் ஆசிரியருடன் சேர்ந்து சத்தமிட்டுப் பாடவும்.
2. பெற்றோருக்குக் கீழ்படிவதன் முக்கியத்துவத்தைக் கூறுக.
3. திரும்பி வந்த மகனை தந்தை எவ்வாறு ஏற்றுக்கொண்டார்.